# THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No.285/2019** **PW.1**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : அருணாச்சலம்
Father's Name : கிருஷ்ணமூர்த்தி
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date:01.04.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A2 to A4 present, A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**முதல் விசாரணை** :-

1. நான் தெற்கு கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். (**சாட்சி எதிரிகளை பார்த்து தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). வழக்கின் 1வது எதிரி விக்னேசை எனக்கு தெரியும். இளம்பிழையாளியை எனக்கு தெரியும். 28.05.2018 தேதிக்கு 15 நாட்களுக்கு முன்பு நான் எனது அக்கா கர்பிணியாக இருந்தார் அவரை பார்ப்பதற்காக நான் சென்னையில் இருந்து ஊருக்கு வந்திருந்தேன். எங்கள் ஊர் காமராஜர் பள்ளிக்கு அருகே எங்களுக்கு சொந்தமாக கோவில் உள்ளது. அங்கு 1வது எதிரி விக்னேஷ் பீடி குடித்து கொண்டிருந்தார். நான் அவரை சத்தம்போட்டேன். சம்பவம் நடந்து 15 நாட்கள் கழித்து 28.05.2018 தேதி இரவு 7.00 நான் இருசக்கர வாகனத்தில் எனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன் அப்போது எதிரிகள் எனது இருசக்கர வாகனத்தை வழிமறித்து புண்டாமவனே, தேவடியாமவனே என்று அசிங்கமாக ஏசினார்கள்.

2. நான் எதிரி விக்னேஷின் அப்பாவிடம் சென்று சொன்னேன். நான் 7.30 மணிக்கு திரும்பி வீட்டிற்கு வரும்போது எதிரி விக்னேஷ் கையில் வைத்திருந்த பிளேடால் எனது இடது கையில் மூன்று இடத்தில் வெட்டியும், வலது கை ஆள்காட்டி விரலில் வெட்டினார்.

(சாட்சி கையில் காயம் ஏற்பட்ட பகுதிகளை காண்பித்தார்). எதிரி கார்த்தி வலது கழுத்து பகுதியில் காலால் மிதித்தார். எதிரி அஜிஸ் அடி வயிற்றில் காலால் மிதித்தார். இளம்பிழையாளி மற்றும் நாராயணன் ஆகியோர்கள் எனது குறுக்கில் குத்தினார்கள். மேற்படி சம்பவம் எனது மாமா சுடலைமுத்துவின் வீட்டின் முன்பு வைத்து நடந்தது. எனது அலறல் சத்தம் கேட்டு எனது அம்மா மற்றும் அக்கா வந்தார்கள். அப்போது எதிரிகள் தேவடியாமவனே, புண்டாமவனே இனிமேல் எனது வழியில் வந்தால் உன்னை அடித்து வெட்டிவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து ஓடிவிட்டார்கள்.

3. எனக்கு ரத்தம் வந்து மயங்கிவிட்டேன். வழியில் வந்த வாகனத்தில் என்னை வள்ளியூர் அரசு மருத்துவமனையில் சிகிட்சையில் சேர்த்தார்கள். அங்கு நான் உள்நோயாளியாக சிகிட்சை பெற்றேன் அங்கு போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர், 1 வது எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.

THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No.285/2019** **PW.2**
Miscellaneous :
Preliminary Register :
STATEMENT OF WITNESS
Name : லெட்சுமி
Husband Name : கிருஷ்ணமூர்த்தி
Village :
Taluk :
Calling :
Religion :
Age : Date:01.04.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused A2 to A4 present, A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**முதல் விசாரணை** :-

1. நான் தெற்கு கள்ளிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரிகளில் 4 வது எதிரி நாராயணனை மட்டும் எனக்கு தெரியும். (**சாட்சி எதிரிகளை பார்த்து 4 எதிரி நாராயணனை மட்டும் தெரியும் என்று அடையாளம் காட்டுகிறார்**). அதிக நாட்கள் ஆகிவிட்டதால் மற்ற எதிரிகளை எனக்க ஞாபகமில்லை. சம்பவ காலத்தில் எனது மகன் சென்னையில் இருந்து எங்களது குடும்ப கோவிலுக்கு வந்திருந்தார். குடும்ப கோவிலுக்கு நாங்கள் சென்றிருந்தபோது அங்கு 1வது எதிரி விக்னேஷ் பீடி குடித்து கொண்டிருந்தார். அவரை எனது மகன் அ.சா.1 சத்தம்போட்டான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு மே மாதம் 28-ம் தேதி இரவு 7.00 மணிக்கு சுடலைமுத்து என்பவர் வீட்டின் முன்பு வைத்து எனது மகனின் அலறல் சத்தம்கேட்டு நான் ஓடி வந்து பார்த்தேன். அங்கு அவருக்கு இடது கையில் ரத்தமாக இருந்தது. யார் எனது மகனை இவ்வாறு அடித்தீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் ஓடிவிட்டார்கள். அங்கு ரோட்டில் ஒரு டாக்சி வந்தது அதில் எனது மகனை ஏற்றி வள்ளியூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிட்சையில் சேர்த்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. 2 முதல் 4 எதிரிகள் ஆஜர், 1 வது எதிரி ஆஜர் இல்லை, மனு தாக்கல். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை இல்லை.